# கம்போங் அத்தாப்பிலும் பாதாள குழியா? அது பழைய காணொளி

கோலாலம்பூர், ஆக. 30-

நாட்டின் பிரபல சுற்றுலா மையமாக விளங்கும் ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நிகழ்ந்த பாதாள குழி சம்பவம் தொடர்பான அதிர்ச்சி அலைகள் இன்னமும் மறைவதற்கு முன்னதாக கம்போங் அத்தாப்பில் பாதாள குழி காணப்பட்டது என்று வெளியான செய்தி பரபரப்பை ஏற்படுத்தியது.

கடந்த ஆகஸ்ட் 23 ஆம் தேதி காலை 8.20 மணி யளவில் இந்தியா வைச் சேர்ந்த விஜயலட்சுமி என்ற 48 வயது மாது பாதாள குழியில் விழுந்து காணாமல் போனார்.




அவர் விழுந்த இடத்தி லிருந்து 50 மீட்டர் தொலைவில் நேற்று முன்தினம் மேலுமொரு சிறிய பாதாள குழி கண்டு பிடிக்கப் பட்டது. இந்நிலையில் கம்போங் அத்தாப்பில் உள்ள ஜாலான் டேவான் பஹாசா எனுமிடத்தில் இதே போன்று ஒரு பெரிய பாதாள குழி காணப்பட்டதாக கூறப்படுகிறது.

சமூக ஊடகங்களில் வெளியான காணொளியில் அந்த பாதாள குழி காணப்படுகிறது. இது அங்குள்ள பகுதி மக்களை அதிர்ச்சி அடைய செய்திருக்கிறது.

ஆனால் இந்த பாதாள குழி புதிய ஒன்றல்ல. முன்பு காணப்பட்ட குழி அது. அது மூடப்பட்டு விட்டது என்று நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் கோலாலம்பூர் மாநகரமன்றம் தெரிவித்தது.

இந்த பழைய காணொளியை சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்ய வேண்டாம் என்று அது கேட்டுக் கொண்டது.